# இந்திய உயர் ஸ்தானிகராலயம்

# கொழும்பு

************

**ஊடக அறிக்கை**

இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்கள் தனது முதலாவது முழு வேலை நாளில் வெளிநாட்டு உறவுகள், திறன்கள் அபிவிருத்தி, தொழில்துறை மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் கௌரவ தினேஷ் குணவர்த்தன, மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி , உள்நாட்டு வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலனோம்புகை அமைச்சர் கௌரவ சமல் ராஜபக்ச, சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுக ன் தொண்டமான் ஆகியோரை சந்தித்தார்.

02. கௌரவ அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அவர்களுடனான சந்திப்பின்போது இந்திய மக்களினதும் தலைமைத்துவத்தினதும் வாழ்த்துக்களை உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்கள் தெரிவித்திருந்ததுடன் காணொளி மாநாடு மூலமாக தனது நியமன சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு மேற்கொண்டிருந்த ஏற்பாடுகளுக்காக உயர் ஸ்தானிகர் தனது நன்றிகளையும் தெரிவித்திருந் தார். 2020 மே 23ஆம் திகதி ஜனாதிபதி கௌரவ கோத்தபாய ராஜபக்ஷ அவர்களுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் தொடர்பாக நினைவூட்டியிருந்த உயர் ஸ்தானிகர் கொவிட்-19 பாதிப்புக்களை எதிர்கொள் ளல் மற்றும் கொவிட்டுக்கு பின்னரான பொருளாதார மீட்சிக்கு தேவையான சகல உதவிகளையும் வழங்குவதில் இந்தியாவின் ஈடுபாட்டினை மீண்டும் உறுதி ப்படுத்தியிருந்தார். அத்துடன் இலங்கையில் சிக்கியிருந்த இந்தியர்கள் விவகாரத்திலும் அவர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும்

நடவடிக்கையிலும் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புக் கு உயர் ஸ்தானிகர் நன்றி தெரிவித்திருந்தார்.

03. உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக் லே அவர்களும் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களும் பெருந்தோட்ட பகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் இந்திய வீடமைப்புத் திட்டம், யாழ்ப்பாண கலாசார நிலையம் உள்ளிட்ட சமூக அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான இருதரப்பு ஒத்துழைப்பு கு றித்த கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தனர். 2017 ஆம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தந்தபோது அறிவி த்திருந்த திட்டத்தின்கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்காக இந்தியா 10,000 வீடுகளை நிர்மாணித்து வருகின்றது. இலங்கை அரசாங்கத்துடனான ஒத்துழைப்பின் அடிப்படையில் இலங்கை மக்களுக் கு உயர்ந்த பெறுபேறுகளை தரக்கூடிய சமூக அபிவிருத்தி திட்டங்களை இந்தியா தொடர்ந்து முன்னெடுக்கு மென உயர் ஸ்தானிகர் மேலும் தெரிவித்தார்.

04. கௌரவ சமல் ராஜபக்ஷ அவர்களின், பல்வேறு அமைச்சுக்களை நிர்வகித்தமை மற்றும் நீண்டகாலமாக பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்தமை ஆகிய அனுபவங்கள் தொடர்பாக குறிப்பிட்டிருந்த உயர்ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே , விவசாயம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நீர் உள்ளிட்ட துறைகளில் இலங்கை இந்தியா இடையிலான பன்முக மற்றும் பாரம்பரியமிக்க ஒத்துழைப்பினை மேலும் வலுவாக்குவதற்கான ஆலோசனைகளையும் அவரிடம் கோரியிருந்தார்.

****

கொழும்பு

26 மே 2020